[திரு. பி.சி. இராமசாமி] [2002 அக்டோபர் 30

7-7-1997 ஆம் ஆண்டு முதல் கூடுதல் ஆணையர் பணியாற்றி வந்தாலும், அவருடைய பதவி மற்றும் அவருடைய பணிகள் குறித்து இந்து சமய அறநிலைக் கொடைகள் வரையறுத்துச் சொல்லப்படவில்லை. எனவே, அவரது பதவிக்கும், அவரது பணிகளுக்கும் சட்டபூர்வமான அங்கீகாரம் அளிக்கும் பொருட்டு, இந்து சமய அறநிலைக் கொடைகள் சட்டத் திருத்தம் தேவைப்படுகிறது. அறநிலையத் துறையைப் பொறுத்தவரையில், அறநிலையத் துறைப் பணியாளர்களுக்கான ஊதியம் முதலில் அரசால் வழங்கப்பட்டாலும், பின்னர் திருக்கோவில் உபரி நிதியிலிருந்து அரசுக்குத் திரும்பச் செலுத்தப்படுகிறது. எனவே, இந்தச் சட்டத் திருத்தத்தினால் எந்தவிதமான கூடுதல் செலவுகளும் அரசுக்கு ஏற்பட வாய்ப்பில்லை. ஏற்கெனவே உள்ள கூடுதல் ஆணையர் பதவிக்குச் சட்டபூர்வமான அங்கீகாரம் மட்டும் அதிகாரிகளுக்கு வழங்குவதற்காகத்தான் இந்தச் சட்டத் திருத்தம் தேவைப்படுகிறது.

2. தகவல் கோரல்—தொடர்ச்சி

(ஆ) சாலைப் பணியாளர்கள் பணி நீக்கம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 55-ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. (குறுக்கீடு)

திரு. இ. புகழேந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாலைப் பணியாளர்களுடைய பணி நீக்கம் குறித்தும், மற்றைய....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது என்னுடைய ஆய்வில் இருக்கிறது. என்னுடைய அறையிலே வந்து கேளுங்கள்.

4. கவன ஈர்ப்பு

வேலூரில் திருவள்ளுவர் பல்கலைக்கழகம் தொடங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 55-ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. ஞானசேகரன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இ. புகழேந்தி, கொடுத்திருக்கிறீர்கள். அமைச்சர் வரவில்லை. கேட்டுச் சொல்கிறேன். திரு. சி. ஞானசேகரன்.